## தலைப்பு 236 - அரச கரும மொழிகள் திணைக்களம் - 2025

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 236 - அரசகரும மொழிகள் திணைக்களத்தின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புக்களுடன் கூடிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2025 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அரச கரும மொழிகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடக்கிய பொழிப்பறிக்கை 2026 மே 22 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் (திருத்தத்தின்) பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2026 யூன் 19 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

அரச கரும மொழிகள் திணைக்களத்தின் 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் ஆகியவற்றுக்குரிய குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விவரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு இலக்கம் 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 திசெம்பர் 17 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 02/2025 இன் பிரகாரம் அரசகரும மொழிகள் திணைக்களத்தின் பொதுத் திறைசேரியின் மற்றும் பாராளுமன்றத்தின் தேவைப்பாட்டிற்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை அரசகரும மொழிகள் திணைக்களத்தின், பொதுத் திறைசேரி மற்றும் இலங்கை பாராளுமன்றத்தின் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 திசெம்பர் 17 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 02/2025 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை வழங்குவது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இன்மைக்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிட்டப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

## 2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 50(ii) இன் படி, மதிப்பீடுகளை இயன்றவரை முழுமையாகச் சரியாகத் தயாரிப்பது கணக்களிக்கும் உத்தியோகத்தரின் பொறுப்பான போதிலும், 19 மீண்டெழும் செலவின விடயங்களுக்குரிய ரூபா 44,322,133 மற்றும் 02 மூலதனச் செலவினங்களுக்குரிய ரூபா 1,365,344 ஆகிய ஒதுக்கீடுகள் 21 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சில் சேமிப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தமையினால் மதிப்பீடுகளைத் தயாரித்தல் சீராக இடம்பெற்றிருக்கவில்லை. | ஆண்டின் போது மென்பொருள் அபிவிருத்தி உள்ளக ரீதியாக மேற்கொள்ளப்பட்டமை, உத்தியோகத்தர்கள் வெளிநாட்டுப் பயணங்களில் ஈடுபடாமை, இடைக்காலப்படிகள் மற்றும் ஏனைய படிகள் உத்தியோகத்தர்களின் அடிப்படைச் சம்பளத்துடன் சேர்க்கப்பட்டமை, இயன்றவரை மின்னஞ்சல் (e-mails) மூலம் கடமைகளை நிறைவேற்றியமை, கடித விநியோகத்தைக் கட்டுப் | நிதிப்பிரமாணம் 50(ii) இன் பிரகாரம் மதிப்பீடுகளை இயன்ற வரை முழுமையாகச் சீராக்க வேண்டிய துடன் பெற்றுக்கொண்ட ஒதுக்கீடுகளைத் திட்டமிட்டவாறு இலக்கிடப்பட்ட காரியங்களை நிறைவேற்றுவதற்குச் செலவிடப்பட வேண்டும். |

படுத்தியமை, மின்சாரத் தடை குறைவடைந்தமையால் மின்னியக்கியைப் பயன் படுத்துவது குறைந்தமை, வாகனப் பயன்பாட்டைக் குறைத்தமை மற்றும் வாகனப் பராமரிப்புக்களைச் சரியாக மேற்கொண்டமை மற்றும் இயந்திரப் பழுதுபார்ப்பைக் கட்டுப்படுத்தியமையால் ஒதுக்கீடுகள் சேமிக்கப்பட்டுள்ளன.

## 3.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்பட்டுள்ளன.

| | அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமை** | | |
| (அ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய இல. 30/2016 பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவு | ஒவ்வொரு எரிபொருள் பரிசோதனையின் பின்னரும் 12 மாத காலப்பகுதியின் பின்னர் அல்லது 25,000 கிலோமீற்றர் தூரம் ஓடிய பின்னர் அல்லது எஞ்சினுடன் தொடர்புடைய பிரதான பழுதுபார்ப்பொன்றின் பின்னர் எனும் விடயங்களில் முதலாவதாக நிகழும் சந்தர்ப்பத்தின் பின்னர் மீண்டும் எரிபொருள் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என்றபோதிலும் திணைக்களத்திற்குச் சொந்தமான வாகனங்கள் தொடர்பாக அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | 2025 ஆம் ஆண்டிற்காக எரிபொருள் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பொது நிர்வாகச் சுற்றறிக்கைகளுக்கமைய வாகனங்களின் எரிபொருள் பரிசோதனை முறையான வகையில் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2024 நவெம்பர் 25 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகை வழிகாட்டல் தொகுப்பு. 4.1.2 ஆம் பந்தி | வருடாந்த முன்மொழியப்பட்ட பெறுகைத் திட்டத்தினுள் அனைத்து முன்மொழியப்பட்ட பெறுகைகளும் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் பாதுகாப்புச் சேவைகள் மற்றும் சுத்திகரிப்பு சேவைகளது பெறுகைகள் 2025 பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2026 ஆம் ஆண்டிற்கான பிரதான பெறுகைத் திட்டத்தைத் தயாரிக்கும் போது பாதுகாப்புச் சேவைகள் மற்றும் சுத்திகரிப்பு சேவைகளது சேவை உள்ளடக்கப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | வழிகாட்டல்களுக் கமைய எதிர்வரும் நிதியாண்டினுள் மேற்கொள்ளப்பட வேண்டிய அனைத்துப் பெறுகைகளும் பிரதிபலிக்கும் வகையில் வருடாந்த முன்மொழியப்பட்ட பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1. திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2025 ஆம் ஆண்டின் வருடாந்த செயல்நடவடிக்கை திட்டத்திற்கு அமைய திணைக்களத்தின் 7 இலக்குகளின் கீழான 31 நடவடிக்கைகள் தொடர்பான முன்னேற்றத்தைப் பரிசோதிக்கும் போது 5 நடவடிக்கைகள் எதிர்பார்க்கப்பட்ட பௌதீக முன்னேற்றத்தில் 50 சதவீதம் அல்லது அதற்குக் குறைவாகவே எட்டப்பட்டிருந்தது. | 2025 ஆம் ஆண்டினுள் தயாரிக்கப்படவிருந்த தொல்லெழுத்தியல் பற்றிய மும்மொழிச் கலைச்சொல் அகராதி எண்பது சதவீதமான முன்னேற்றத்தை எட்டியுள்ளது. நாட்டைத் தாக்கிய தித்தா அனர்த்த நிலைமையினால் நிறுவனங்கள் பணிப்பழுவாக இருந்தமையினால் தொகுப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்த கலைச்சொற்களை நிறைவு செய்து ”Termino hub” இணையத்தளத்திற்கு விடுவிக்கும் பணிகள் 2026 திசெம்பர் 31 ஆம் திகதியளவில் மேற்கொள்ளப்படுவதற்கு அரச கரும மொழிகள் ஆணையாளர் நாயகம் அவர்களினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. | நிறுவனத்தின் இலக்குகளை எட்டுவதற்காக இனங்காணப்பட்ட நடவடிக்கைகளை உயரிய அளவில் நிறைவேற்றிக்கொள்வதற்குச் செயற்பட வேண்டும். |

## 4.2 ஏனைய அவதானிப்புகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆணையாளர் நாயகம் அலுவலகத்தின் சமையலறை அலுமாரி Pantry Cupboard மற்றும் ஆணையாளர் உத்தியோகபூர்வ அறையின் முன்பகுதியை நவீனமயமாக்குவதற்காக 2025 ஒக்டோபர் 21 ஆம் திகதி நடைபெற்ற திணைக்களக் பெறுகைக் குழுவினால் ரூபா 1,080,940 (பெறுமதி சேர் வரி தவிர்ந்த) தொகைக்குச் சேவை நிறுவனமொன்று தெரிவுசெய்யப்பட்டிருந்ததுடன் குறித்த தெரிவுசெய்யப்பட்ட நிறுவனத்துடன் ஒப்பந்த உடன்படிக்கை அதற்கு 6 நாட்களுக்கு முன்னர் அதாவது 2026 ஒக்டோபர் 15 ஆம் திகதியன்று கையொப்பமிடப்பட்டிருந்தது. | ஆணையாளர் நாயகம் அலுவலகத்தின் சமையலறை அலுமாரி Pantry Cupboard மற்றும் ஆணையாளர் உத்தியோகபூர்வ அறையின் முன்பகுதியை நவீன மயமாக்கல் தொடர்பாக விலைமதிப்பீட்டுக் குழு மற்றும் பெறுகைக் குழு வினால் தெரிவுசெய்யப்பட்ட நிறுவனத்துடன் உடன்படிக்கையிடப்படுகையில் தவறுதலாக ஒப்பந்தத் திகதி குறிக்கப்பட்டுள்ளதோடு, எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் இடம்பெறாதிருக்கவும், பெறுகைச் செயற்பாடுகள் முறையான வகையில் மேற்கொள்ளப்படுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | ஒப்பந்தச் செயற்பாடுகள் வெளிப்படைத்தன்மையுடன் வழிகாட்டல்களுக்கமைய மேற்கொள்ளப்பட வேண்டும். . |

## 4.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் பரீட்சைகளுக்குத் தேவையான ஒலிநாடாப் பதிவுகளை மேற்கொள்வதற்காக ரூபா 2,426,125 செலவிடப்பட்டு 2017 ஆம் ஆண்டில் ஒலிப்பதிவுக்கூடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இவ் ஒலிப்பதிவுக்கூடம் 2025 ஆம் ஆண்டில் 2 தேசிய மொழித் தகைமை மதிப்பீட்டுப் பரிசோதனைகளுக்குத் தேவையான ஒலிநாடாக்களைத் தயாரிப்பதற்காக மாத்தரமே பயன்படுத்தப்பட்டிருந்ததன் காரணமாக குறைபயன்பாட்டிலிருந்தது. | அரச நிர்வாகச் சுற்றறிக்கை இல. 18/2020 (ii) மற்றும் 01/2026 இன் ஏற்பாடுகளுக்கு அமைய மீண்டும் அரச கரும மொழித் தேர்ச்சி வாய்மொழிப் பரீட்சை நடாத்தப்பட உள்ளமையால் அப்பரீட்சையின் செவிமடுக்கும் ஆற்றல் பரிசோதனைக்காக எதிர்காலப் பகுதியில் மீண்டும் பெருமளவில் ஒலிநாடாக்களைத் தயாரிக்க வேண்டியேற்படும். | சொத்துக்களை உச்ச அளவில் பயன்படுத்துவதற்குத் திட்டமிட்டுச் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மொழி ஆய்வகத்தினுள் ‘‘சேர்வருடன்’’ (Servers) கூடிய 30 ‘‘மொனிடர்களும்’’ (Mnoitors), மொழி மதிப்பீட்டு மையத்தினுள் 11 கணனிகளும் மற்றுமொரு விரிவுரை மண்டபத்தில் ‘‘சேர்வருடன்’’ (Servers) கூடிய 30 ‘‘மொனிடர்களும்’’ (Mnoitors), காணப்பட்டதுடன் 2025 ஆம் ஆண்டில் திணைக்களத்தினால் ஒரு சான்றிதழ்ப் பாடநெறி மாத்திரமே இவ்விரிவுரை மண்டபங்களிலும் மொழி ஆய்வகத்திலும் நடாத்தப் பட்டிருந்ததுடன் வேறு எந்தவொரு பாடநெறியும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய இவ்விரிவுரை மண்டபங்கள் 2025 ஆம் ஆண்டிலும் குறை பயன்பாட்டிலிருந்தன. | பொது நிர்வாகச் சுற்றறிக்கை 18/2020 வெளியிடப்பட்டதுடன் சிங்களம் மற்றும் தமிழ் மொழிப் பாடநெறிகள் நாடெங்கிலும் நடாத்தப் பட்டமையாலும் இணையவழி முறைமை மூலம் கற்பித்தமையாலும், மொழி ஆய்வகத்தினுள் நடாத்தப்பட்ட மொழிப் பாடநெறிகளுக்காகப் பங்குபற்றிய மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைந்த மையாலும் மொழிப் பாடநெறிகளை நடாத்துவது குறைவடைந்தது. | மொழி ஆய்வகம், மதிப்பீட்டு மையங்கள், விரிவுரை மண்டபங்கள், கணனிகள் மற்றும் உபகரணங்கள் முதலான சொத்துக்களை உச்ச அளவில் பயன்படுத்துவதற்குத் திட்டமிட்டவாறு செயற்பட வேண்டும். |

## 4.4 முகாமைத்துவ பலவீனங்கள்

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | ரூபா 10,810,000 கிரயமான, மொறட்டுவை பல்கலைக்கழகத்தினால் தயாரித்து வழங்கப்பட்ட சிங்கள-தமிழ் மற்றும் தமிழ்-சிங்கள மொழிபெயர்ப்பு மென்பொருளை 225 இற்கு அண்மித்த பயனாளர்கள் பயன்படுத்துவதாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் மின்னஞ்சல் முகவரிக்குத் தகவல்களைக் கோரிய போது எவரும் அதனைப் பயன்படுத்தியிருக்கவில்லை. | மொழிபெயர்ப்பு மென்பொருளானது பொது நிர்வாக அமைச்சிற்குரிய ‘‘சேர்வர்’’ (சேவையக) ஒன்றில் பராமரிக்கப்பட்டு 225 நபர்களுக்கு அண்மித்த அளவிலான பயனாளர் களுக்குப் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ளமையினால் பல்கலைக்கழகத்திற்குச் செலுத்தப்பட்ட பணத்திற்கு ஈடான மென்பொருளொன்று உருவாக்கிக் கொடுக்கப் பட்டுள்ளது. அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள மென் பொருளை விடச் சரியான மற்றும் மொழிபெயர்ப்பு மென்பொருட்கள் தற்போது சந்தையில் உள்ளமையால் பயனாளர்கள் குறித்த மென் பொருட்களைப் பயன்படுத்து வதற்கு முற்பட்டுள்ளனர். | காலத்திற்குப் பொருத்தமான மாற்றங்களுக்கு அமைவாக நிலவும் மென்பொருளை அபிவிருத்தி செய்து எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளையும் செயற்பாடுகளையும் காரியங்களையும் முனைப்புடன் பயன்படுத்துவதற்குச் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2018-2019 ஆண்டுகளில் மொழித் தேர்ச்சிப் பாடநெறிகளுக்காக அச்சிடப்பட்டிருந்த ரூபா 2,236,978 பெறுமதியான 14,984 துணைப் பாடநெறி நூல்கள் பல்வேறு வகையிலான ரூபா 263,658 பெறுமதியான 19 “டோனர்” (Toners) மற்றும் பெறுமதி இனங்காணப்படாத 04 “டோனர்” வகைகளும் 2025 ஆம் ஆண்டில் பயன்பாடின்றிக் காணப்பட்டன. | இந் நூல்களை அரச நிறுவனங்களுக்கும் பாடசாலை நூலகங்களுக்கும் இலவசமாக விடுவிப்பதற்கும் கோரிக்கை களுக்கமைய விநியோகிப்பதற்கும்,ரோனியோ தாள்கள் (Rnoio Paper) 22 மற்றும் 37 CD Writing Pen என்பன எதிர்காலத்தில் திணைக்களத்தினால் பயன்படுத்துவதற்கும், தொலைநகல் சுருள்கள் (Fax rolls) 8 பயன்படுத்தப்படும் இயந்திரங்கள் இத் திணைக்களத்திலிருந்து அகற்றப்பட்டுள்ளமையால் ஏனைய அரச நிறுவனங்களின் தேவைகளைக் கேட்டு விடுவிப்பதற்கும், களஞ்சியத்தில் உள்ள “டோனர்”கள் தொடர்பாக அமைச்சின் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் அறிக்கை மற்றும் பரிந்துரைகளின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | தேவைகளை இனங்கண்டு கொள்வனவுகளை மேற்கொள்ள வேண்டும் என்பதோடு தேவையற்ற கொள்வனவுகள் தொடர்பாகப் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். நிலவும் மேலதிகத் தொகைப் பொருட்கள் தொடர்பாக எதிர்காலத் தேவைகள் ஏற்படும் பிரிவுகளை இனங்கண்டு பயன்பாட்டிற்கு எடுப்பதற்குச் செயற்பட வேண்டும். |

**5. மனிதவள முகாமைத்துவம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2025 திசெம்பர் 31 ஆம் திகதியன்றிருந்தவாறு திணைக்களத்தின் 194 ஆகவிருந்த அங்கீகரிக்கப்பட்ட பதவியணியிலிருந்து சிரேஷ்ட நிலை சார்ந்த 5 வெற்றிடங்களும், மூன்றாம் நிலை சார்ந்த 38 வெற்றிடங்களும், இரண்டாம் நிலை சார்ந்த 24 வெற்றிடங்களும் ஆரம்ப நிலை சார்ந்த 2 வெற்றிடங்களும் என 69 வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும் பதவியணித் தேவைகளைக் காலத்திற்குப் பொருத்தமானவாறு மீளாய்வு செய்து வெற்றிடங்கள் தொடர்பாகச் செயற்பட்டிருக்கவில்லை. | ஆணையாளர் / பிரதி ஆணையாளர் ஆகிய 02 பதவிகளிற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான பரீட்சையை நடாத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு மொழிபெயர்ப்பு அதிகாரி மற்றும் மொழி அதிகாரி ஆட்சேர்ப்புப் பிரமாணக்குறிகள் அரச சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. | பதவியணித் தேவைகளைக் காலத்திற்குப் பொருத்தமான வாறு மீளாய்வு செய்து உகந்த பதவியணியைப் பேணி வர வேண்டும். |